செ.வெ.எண்: 02 நாள்: 01.12.2020

**கரூர் மாவட்டம்**

**அருள்மிகு. கல்யாணபசுபதீசுவர சுவாமி திருக்கோவில் குடமுழுக்குத் திருவிழாவினைக்கான நேரடியாக கோவிலுக்குவருவதை தவிர்த்து, உள்ளுர் தொலைக்காட்சிகளில் கண்டுகளிக்க வேண்டும் - கொரோனா தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு**

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:**

கரூர் மாவட்டம, கரூர் நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு. கல்யாண பசுபதீசுவர சுவாமி திருக்கோவில் குடமுழுக்குத் திருவிழா எதிர்வரும் 04.12.2020-ம் தேதியன்று நடைபெற உள்ளதால், பொதுமக்கள் கொரோனா தொற்றுப் பரவலை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடிவக்கையாக கோவிலுக்கு வருவதை தவிர்க்க வேண்டும்.

04.12.2020 முடிய ஆகம விதிப்படி நிகழ்ச்சிகள் மற்றும் 48 நாட்கள் நடைபெறும் மண்டல பூஜைகள் அனைத்தும் உள்ளுர் தொலைகாட்சிகள் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளதால் பொது மக்கள் அனைவரும் கோவிலுக்கு வருவதை தவிர்த்து தங்களது வீட்டிலேயே இருந்து அதனை கண்டுகளிக்க வேண்டும்.

குறிப்பாக 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோர்கள் மேற்படி திருக்கோவிலுக்குள் செல்ல கண்டிப்பாக அனுமதி மறுக்கப்படுகிறது. கொரோனா தொற்றுப் பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.